Public Health England

NHS

## இலண்டனில் உள்ள பெற்றோர்களுக்கான தகவல்கள்

# காசநோயும், தடுப்பூசி மருந்தும் உங்கள் குழந்தையும்

ஐக்கிய இராஜ்யத்தில், வேறு பல நாடுகளைப் போலவே, காசநோய் உள்ள ஆளொருவருடன் தொடர்பு ஏற்படக்கூடிய குழந்தைகளுக்கு BCG (Bacillus Calmette-Guerin) தடுப்பூசி ஏற்றுமாறு கோரப்படுகிறது.

காசநோய் அதிகரித்த விகிதங்களில் காணப்படும் பகுதி ஒன்றில் வசிக்கும் குழந்தைகள், அல்லது காசநோய் அதிகரித்த விகிதங்களில் காணப்படும் நாடு ஒன்றில் இருந்து வந்த பெற்றோருடன், அல்லது தாத்தா பாட்டியுடன் வசிக்கும் குழந்தைகள் இவர்களில் உள்ளடங்குவர்.



immunisation

the safest way to protect your child

பல இலண்டன் மகப்பேறு கூடங்கள், 2016 முதல், அனைத்துக் குழந்தைகளுக்கும் BCG ஏற்ற முன்வந்தன. காசநோய் விகிதங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளைவிட அதிகரித்துக் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இருப்பினும், கடந்த 8 ஆண்டுகளாக, இலண்டனில் உள்ள காச நோயாளர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு வீழ்ச்சி கண்டுள்ளது.

ஆகவே, 2020 செப்டம்பர் முதல், இலண்டனில் பிறக்கும் குழந்தைகளில் ஒருவருக்கும் BCG தொடர்ந்து கிடைக்கமாட்டாது. காசநோய் அதிகரித்த விகிதங்களில் காணப்படும் பகுதி ஒன்றில் வசிக்கும் குழந்தைகளுக்கு, அல்லது காசநோய் அதிகரித்த விகிதங்களில் காணப்படும் நாடு ஒன்றில் இருந்து வந்த பெற்றோருடன் அல்லது தாத்தா பாட்டியுடன் வசிக்கும் குழந்தைகளுக்கு BCG தடுப்பூசி மருந்து தொடர்ந்து கிடைக்கும். BBC தடுப்பூசி மருந்து சமூக சிகிச்சை நிலையங்களில் கிடைக்கும்.

**செப்டம்பர் 2020 முதல், கீழ்க்கண்ட கேள்விகளில் எவற்றுக்கும் நீங்கள் 'ஆம்' என்று பதில் அளிப்பீர்களானால், உங்கள் மருத்துவ தாதி, சுகாதாரப் பார்வையாளர் அல்லது பொது மருத்துவர் (GP) உங்கள் குழந்தையை சமூக BCG தடுப்பூசி மருந்து சிகிச்சை நிலையம் ஒன்றின் கவனத்துக்குக் கொண்டு வருவார்.**

- உங்கள் குழந்தை, குழந்தையின் தாய், தந்தை, தாத்தா பாட்டி அல்லது உங்களுடன் வசித்துவரும் எவரும் அதிகரித்த விகிதத்தில் காசநோய்* காணப்படும் ஒரு நாட்டைச் சேர்ந்தவரா?

- நீங்களும் உங்கள் குழந்தையும் இந்த நாடுகளில் ஒன்றுக்கு, வசிக்கவோ நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தங்கவோ செல்ல இருக்கிறீர்களா?

- உங்களுடன் வசிக்கும் அல்லது உங்கள் குழந்தையுடன் அதிக நேரத்தைச் செலவிடும் ஒருவருக்கு காசநோய் உண்டா அல்லது முன்னர் இருந்ததா?

- நீங்கள் இலண்டனின் நியூஹாம் மாவட்டத்தில் (London Borough of Newham) வசிக்கிறீர்களா?



* www.gov.uk/government/publications/tuberculosis-tb-by-country-rates-per-100000-people

© Crown copyright 2020. பொருள் குறியீடு: 2020103B. இங்கிலாந்து பொதுச் சுகாதார நுழைவாயில் எண்: 2020103. வடிவம் 1. 27-07-2020 இந்தச் சுவரொட்டியின் பிரதிகளை, மேலே உள்ள பொருள் குறியீட்டைப் பயன்படுத்தி, HealthPublications.gov.uk-இல் கோரிக்கை விடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.